20.08.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை. தொடர்ச்சி (அ.வ.எண்.7/2020) திரு.குருசாமி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

எனக்கு 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். 3 பெண்களில் 1 பெண்ணை திருப்பூர், மற்றொரு பிள்ளை கோவில்பட்டியிலும், மற்றொரு பிள்ளை ஈரால் அருகில் உள்ள வாலம்பட்டியில் கட்டி கொடுத்துள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் என்றால் 4 பேர்கள். அவர்களில் நான், சங்கரலிங்கம், கோமதி, ஆவுடையம்மாள். எனது அப்பா பெயர் என்ன என்றால் அருணாசலம். அருணாசலத்துடன் பிறந்தவர்கள் 4 ஆண்கள், 4 பெண்கள். எனது தாத்தாவின் பெயர் என்ன என்றால் சங்கரலிங்கம். வழக்கு சொத்து சங்கரலிங்கத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவருடைய பூர்வீக சொத்தில் சங்கரலிங்கத்தின் 4 மக்களுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரிதான். மேற்படி சங்கரலிங்கத்தின் மக்கள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இறந்துவிட்டார்கள் அவர்கள் வாரிசுகள் இருந்து வருகிறார்கள். இந்த வழக்கு சொத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்பதால் எனக்கு இந்த வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரிதான். அந்த 4 மக்களின் வாரிசுகளுக்கும் பாத்தியம் உள்ளது. இந்த வழக்கின் எதிர்கட்சியாக சேர்த்துள்ளவர்கள் என்றால் முறைக்கு தங்கை முறைகள். தங்கை முறைகள் என்பது மேற்கண்ட சங்கரலிங்கத்தின் வழி வந்த வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் 40 வருடங்களுக்கு முன்பே தொழு அமைத்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் பொய். அந்த தபசில் சொத்து பிரதிவாதிகளின் வகையறாவுக்கு தான் பாத்தியப்பட்டது என்றும், இந்நிலையில் எனது அனுமதியின் பேரில் தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருவதாக சொல்வது

ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அனுமதி கொடுத்ததாக சொல்லும் தேதி யார் யார் உடன் இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் யாரும் இல்லை நானாக தான் கொடுத்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
20.08.2024.